## ஓட்டேரியின் குறுக்கே புதிய பாலம்.

* குறுகிய கால வினா எண். 16 திரு. சு. பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஓட்டேரி பாலம் கட்டுவதற்காக அரசு அனுமதி அளித்து நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா ?—

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்போது தொடங்கப் படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஓட்டேரி நல்லா குக்ஸ் சாலையில் உள்ள பாலத்தை இடித்து போக்குவரத்துக்கு தகுதியுற்றதாக, ரூ. 23.25 இலட்சம் செலவில் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான செலவை 1979–80–ல் ஒருங்கிணைந்த திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் மீதமாகும் தொகையிலிருந்து சரி செய்யப்படும்.

(ஆ) இந்த வேலைக்கு மாநகராட்சி ஆணையரால் ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, ஓட்டேரி நல்லா மீது ஏற்கனவே கட்டப்பட்டிருக்கும் பாலம் நான்கு பஸ் பாதைகள் கொண்டதாக இருக்கிறது. அந்தப் பாலமானது பஸ்கள் செல்லவும் மக்கள் செல்லவும் பெரும் இடைஞ்சலாக இருப்பதால் அந்தப் பாலத்தைத் துரிதமாக எடுத்துக் கட்டி வேலை செய்ய துரித நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் மேற்கொள்வார்களா என்று அறியவிரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, அடையாறு பாலத்திற்குப் பக்கத்தில் சோடியம் வேஃபர் விளக்குகள் பொருத்தப்படுமா? அதுபோன்றே காமராஜர் சாலையிலும்—இன்று காமராஜர் பிறந்த தினம்—அங்கேயும் சோடியம் வேஃபர் விளக்குகளைப் போட்டும் அழகுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, அடையாறு பாலத்திற்குப் பக்கத்திலே சோடியம் வேஃபர் விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அதைப்போல, சாலையின் சந்திப்புகளில் முக்கியமான சாலைகளில் 30 இலட்சம் ரூபாய் செலவில் விளக்குகளைப் போடுவதற்கு உண்டான ஆணை பிறப்பிக்கப்பட்டு செயல்படுத்த இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

1980 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் என்ன கேள்வி கேட்கப்படுகிறது என்பதை உறுப்பினர்கள் தெரிந்து கொண்டு கேள்வி கேட்கவேண்டும். உறுப்பினரவர்கள் காமராஜர் சாலை, அடையாறு பாலம் என்றெல்லாம் போய்விட்டால் அது கன்னியாகுமரி வரைக்கும்கூடப் போய்விடும். எனவே, சம்பந்தப் பட்ட கேள்விகளாக இருந்தால் துணைக்கேள்விகள் வரவேற்கப் படுகின்றன.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த அவையில் அமைச்சர்கள் தெரிவிக்க விரும்புகின்ற சில பிரச்னைகளைத் திடீரென்று கேள்விகளாக உருவாக்கி, அமைச்சர்கள் தெரிவிக் கின்ற நிலைமை ஏற்படுவதாக இதற்குமுன்பே ஒருமுறை சுட்டிக் காட்டியிருக்கிறேன். அப்படி அமைச்சர்களின் வசதிக்காகக் கேள்விகள் எழுப்பப்பட்டால் சபாநாயகரவர்கள் முதலிலேயே அதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகள்—ஊராட்சி ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கல்.

*குறுகிய கால வினா எண். 17—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ). தமிழ்நாட்டில் பல நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் தங்களது ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் உள்ள நிலை அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அப்படிப்பட்ட நிலைக்கு காரணமென்ன?

(இ) அதை சீர்திருத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—(அ) குடியாத்தம், பெரியகுளம் நகராட்சிகளிடமிருந்தும், நங்கவரம் பேரூராட்சி யிலிருந்தும் இவ்வித நிதி பற்றாக் குறைபற்றி அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

(ஆ) மற்றும் (இ) 28–6–1980–ம் நாளிட்ட அரசு ஆணையில் குடியாத்தம் நகராட்சிக்கு வழிவகை முன் பணமாக ரூ. 1 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. இதேபோல், பெரியகுளம் நகராட்சிக்கும், நங்கவரம் பேரூராட்சிக்கும் வழிவகை முன்பணம் கொடுப்பதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, பல நகராட்சி மற்றும் ஊராட்சிகளில் சொத்து வரி பத்தாண்டு களுக்கு மேலாக வசூலிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு வேண்டிய நடைமுறைகளை அரசு கையாளுமா?